## அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம், றொம்மன்
## ANNAI POOPATHI TAMILSK KULTURSENTER, ROMMEN
## ANNAI POOPATHI TAMIL CULTURAL CENTER, ROMMEN

# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 20 - 2025*

- **வைகாசி 18, தமிழின அழிப்புநாளை முன்னிட்டு வெள்ளிக்கிழமை நினைவுகூர இருப்பதுடன் முள்ளிவாய்க்கால் கஞ்சியும் காய்ச்சி மாணவர்களுக்கு பரிமாறப்படும்.**
- **சனி 17. மே. நோர்வேயின் சுதந்திரநாள். பாடசாலை நடைபெறமாட்டாது.**
- **ஞாயிறு மே. 18 தமிழின அழிப்புநாள். அன்றும் பாடசாலை நடைபெறமாட்டாது.**

### கல்வி

கடந்தவாரம் சனி, ஞாயிறு நடைபெற்ற அனைத்துலகத் தமிழ் புலன்மொழித்தேர்வுக்கு உதவி புரிந்த பெற்றோர் பிரதிநிதிகள் அனைவருக்கும் மனதார நன்றிகளைக் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- **இவ்வாரம் வெள்ளிக்கிழமை தேர்வுகளுக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெறும்.**

**தேர்வுகள் நடைபெறும் நாள் விவரம்:**

- ஆண்டிறுதி பொதுத்தேர்வு 23,24,25.05.25 (வெள்ளி,சனி,ஞாயிறு)
- அனைத்துலகத் தமிழ் ஆண்டிறுதி எழுத்துத்தேர்வு 07.06.25 சனிக்கிழமை

### விளையாட்டு 2025

விளையாட்டுப் போட்டிக்கு பதிவதற்கான விண்ணப்பப்படிவமும், விளையாட்டுப்போட்டித் தகவல்களும் வகுப்புக்குழுக்களில்பகிரப்பட்டுள்ளன

18.05.2025ம் திகதிக்கு முன்னர் விளையாட்டுப் பதிவுகளைச் செய்து, அதற்கான கட்டணத்தையும் செலுத்தவும். இதுவே பதிவு செய்வதற்கான இறுதிநாளாகும். பதிய முடியாதவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

**ஆண்டுத்திட்டத்தின்படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ள நாள்கள் விவரம்:**

1. ஞாயிறு 08.06.2025 - இல்லங்களுக்கிடையே தெரிவுப்போட்டி.
2. திங்கள் 09.06.2025 - குழை எடுத்தல் கிளித்தட்டு தெரிவுப்போட்டி
3. சனி 14.06.2025 - அரையிறுதி, கள இறுதிப் போட்டிகள்.
4. ஞாயிறு 15.06.2025 - 34ஆவது இல்லவிளையாட்டுப் போட்டிகள்.

- ❖ மாணவர்கள் இவ் விளையாட்டுப்போட்டியில் கலந்துகொள்வதற்கு முன் Tamilsk Barn og Ungdom Idrettsklubb (TBUK) இல் உறுப்பினராகப் பதிவுசெய்தல் வேண்டும். இவ்விடயம் சார்ந்த ஒரு படிவம் மற்றும் *PDF* அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.
- ❖ விளையாட்டுப் போட்டிக்கான குழுவில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் எம்மோடு தொடர்புகொள்ளவும்.
- ❖ விளையாட்டுப்போட்டிக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்.

### இக்கல்வியாண்டின் இறுதிநாள் - 15.06.2025

## நிதி

கட்டணங்களைச் செலுத்தும்படி வேண்டுகின்றோம். ஏற்கனவே செலுத்தியவர்கள் இத்தகவலை விலத்திச்செல்லவும்.

**குறிப்பு:** *அன்னை தலைமை மற்றும் எம்மால் வழங்கப்பட்ட கட்டண அறவீடுகள் முழுமையாகச் செலுத்தியவர்கள் மட்டுமே (3 மாதங்களுக்கு முன்னர் செலுத்தியிருத்தல் வேண்டும்.) அங்கத்துவத்துவ உரிமையினை உறுதிப்படுத்தியவர்கள் என்பதனை அறியத்தருகின்றோம். மேலதிக விவரம் தேவைப்படின் எம்மைத் தொடர்புகொள்ளவும்.*

## தேர்வுக்குழு 2025

கடந்த வாரம் தேர்வுக்குழுவுடனான சந்திப்பு மிக ஆரோக்கியமாக இடம்பெற்றது. இவ்வாண்டு இலையுதிர் காலப்பகுதியில் ஆண்டுக்கூட்டத்தினை நடத்தலாம் என தீர்மானிக்கப்பட்டது. அதற்கு முன் அனைவரும் தங்களின் உறுப்பினர் உரிமையை உறுதிப்படுத்துமாறு அன்போடு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். நிர்வாகத்தில் இணைந்து பணியாற்ற ஆர்வமுள்ளவர்கள் விரைவாகத் தங்கள் விவரங்களைத் தெரிவுக்குழுவினருக்கு எழுத்துமூலமாக வழங்குமாறு வேண்டப்படுகின்றீர்கள். நிர்வாகத் தெரிவுக்குழு மின்னஞ்சல்: *valgkomite.rommen@annai.no*

**நிர்வாகத்தில் இணைந்து கொள்பவர்களுக்கு இருக்கவேண்டிய முக்கிய தகமை!**
*அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் யாப்பு விதிகளுக்கும், நடைமுறைவிதிகளுக்கும் நேர்வே நாட்டு சட்டவிதிகளுக்கும் கட்டுப்பட்டு, கல்வி, கலை மற்றும் விளையாட்டு நிகழ்வுகளுக்குப் போதியளவு நேரம்விடக்கூடியவர்களாக இருத்தல் அவசியம். முக்கியமாக உறுப்பினர் உரிமையை முழுமையாகப் பெற்றவராக இருத்தல் வேண்டும்.*

### முக்கிய கவனம்!!

1. *கற்பித்தல் நேரத்தில் மாணவர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எந்த இடையூறும் விளைவிக்காதவண்ணம் பெற்றோர் பாதுகாவலர்கள் கவனத்தில் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.*

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது ஐயப்பாடுகள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம். தொலைபேசி இல. 004740076104.***

நன்றி!

நிர்வாகம் - றொம்மன் வளாகம்

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்.